ஜனவிநோதினி.

இல. ௨. பெப்ருவரி மீ 1870. புஸ்த. I.

இந்துவாலிபர்கள் தங்கள் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள்.

சென்றமாச இலக்கத்தில் இந்துதேசத்தின் பூர்வீக தற்கால ஸ்திதியையும், அதின் தற்காலக் குறைகளையுஞ் சுருக்கமாய் எடுத்துக் காட்டினோம். இச்சமயத்தில் இந்துவாலிபர்கள் தங்கள் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளையும், அவர்கள்பேரில் சுமந்திருக்கும் உத்தரவாதத்தையும் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறோம்.

எத்தேசத்திலும் வாலிபர்கள் மற்றெவ்வகை நிலைமையோரினும விசேஷித்தவர்களாயிருக்கிறார்கள். ஒரு தேசத்தின் பிற்கால ஸ்திதி தற்காலத்தில் அதின் வாலிபர்கள் வளர்க்கப்பட்டு வரும் விதத்திற்கும், அவர்களுடைய நடத்தைகள் குணாதிசயங்களின் தன்மைக்குந் தக்கபடியிருக்கும். ஒரு தேசம் எவ்வளவு உயர்ந்த ஸ்திதியிலிருந்தபோதிலும், அது கல்வி, நாகரிகம், செல்வம் முதலியவற்றில் மிகச் சிறப்புற்றிருப்பினும், எககாரணத்தினாலாவது அதிலுள்ள வாலிபர்கள் கல்விவிர்த்தி, மனோவிர்த்தி, சன்மார்க்க விர்த்தி முதலியவற்றை அசட்டைசெய்து தகாதவிதமாய்க் காலத்தைப் போக்கிவருவார்களேயாகில், அத்தேசம் சொல்பகாலத்திற்குள் தன் உயர்நிலையை இழந்து சகல விஷயங்களிலும் தாழ்ந்துபோமென்பதற்குச் சந்தேகமில்லை. இப்பிரமாணத்தை நன்றாய் அறிந்திருந்த (Catiline) காற்றிலைன் என்பவன் மகா கீர்த்திப் பிரதாபத்தையடைந்திருந்த ரோமாபுரியின் செம்மையும் பலமுமான் ராஜ்ஜியபாரத்தைக் கவிழ்த்து, பல குழப்பங்களை உண்டு

பண்ணி, ராஜ்ஜிய அதிகாரத்தை அபகரித்துக்கொள்ளக் கருதின பொழுது, அவன் செய்த பிரயத்தினங்களில் விசேஷமானதென்ன வெனில்: அந்நகரத்திலுள்ள வாலிபரின் ஒழுக்கங்களைக் கெடுத்து, அவர்கள் துஷ்டகிருத்தியங்களில் பயிலும்படி செய்ததுதான். ஒவ்வொரு தேசத்தின் பலமும் மகிமையும், அதிலுள்ள வாலிபரின் விவேகம் நற்குண நற்செய்கைகளோடு சம்பந்தப்பட்டிருக்கிற தென்கிற சத்தியத்தைக் காற்றிலேன் அனுபவசித்தமாய் அறிந்திருந்தபடியினாலே, அவன் இவ்வாறு செய்யத் துணிந்தான். அவன் கொண்ட நோக்கம் கெட்டதாயினும் அந்நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு, அவன் பிரயோகித்த எத்தனம் அவனுடைய புத்தி தீட்சண்யத்தை நன்ருய் விளக்குகிறது. ஒரு தேசத்திலுள்ள வாலிபர் தீய ஒழுக்கங்களினின்று பாதுகாக்கப்பட்டு கல்விவிர்த்தி மனோவிர்த்தி பெற்று, தங்கள் சுயதேசத்தில் செய்யவேண்டிய நானாவித வேலைகளைக் குறைவின்றிச் செய்துமுடிப்பதற்கு அவசியமான திறமை, விவேகம், சற்குணங்களில் தேறிவருவார்களாகில், அத்தேசம் மென்மேலும் பலமடைந்து சகல நல்விஷயங்களிலும் அபிவிர்த்தியாகி ஓங்கி வளருமென்பதற்குச் சந்தேகமில்லை. அத்தேசத்தின்மேல் சத்துருக்கள் செய்யும் பிரயத்தனங்களெல்லாம் அநுகூலப்படாமல் அவமாய்ப்போமென்பதற்கு ஐயமில்லை. இக்காரணத்தையிட்டே எக்காலத்திலும் எத்தேசத்திலுமுள்ள தேசாபிமானிகள் சன்மார்க்கபோதகர் முதலியோர், தங்கள் சுயதேசத்தின் க்ஷேமத்தையும் சீர்திருத்தத்தையும் நாடினபொழுது, அவர்கள் செய்த பிரயத்தனங்கள் யாவற்றிலும் சுதேச வாலிபர்கள் சுகலத்திலும் சீரடைநது, நல்லறிவு, விவேகம், நற்குணங்களில் தேறுவதற்கு வேண்டிய யத்தனங்களையே பிரதானமாகக் கையாடியிருக்கிறார்கள்.

இந்துவாலிபர்கள் இத்தேசத்தில் செய்யவேண்டிய கடமைகள் தவிர்க்கமுடியாத ஆவஸ்யகமானவைகள்; அவர்கள்பேரில் சுமந்திருக்கிற உத்தரவாதம் மிகப் பெரிதானது; எப்படியெனில், முற்காலத்தில் நமது தேசம், கல்வி, நாகரீகம், கைத்தொழில் முதலியவற்றில் மற்ற தேசங்களுக்கு வெகுதூர முந்தினதாயிருந்தும், பிற்காலத்தில் அநேக காரணங்களினிமித்தம் நமது ஜனங்கள் பலவித பலவீனங்களடைந்து, கல்வி, மனோவிர்த்தி, நாகரீகம், சன்மார்க்க முதலியவற்றில் முயற்சியும் தேர்ச்சியுமற்றுப்போய்

தாழ்ந்த ஸ்திதிக்குள்ளானார்கள். ஆனால் தெய்வசங்கல்பத்தினால் இந்தேசம் அங்கிலேய துரைத்தனத்திற்குள்ளானதோடு, குழப்பங்கள் யாதொன்றுமில்லாமல் தேசமெங்கும் அமைதலும், சமாதான சவுக்கியமும்; இலேசாயும் அதிசீக்கிரமாயும் பிரயாணங்கள் செய்வதற்கு தேசமெங்கும் நல்ல ராஜபாட்டைகளும், இருப்புப் பாதைகளும்; கல்வி நாகரீக கைத்தொழில் விர்த்திக்கேற்ற அநேக வகை நல்ல ஏற்பாடுகளும் இக்காலத்தில் உண்டாயிருக்கின்றன. இவையெல்லாம் நமது தேசம் சீரடைந்து உயர்வதற்கான அநுகூலங்கள். கல்வி, நாகரீகம், வேளாண்மை, கைத்தொழில் முதலிய விஷயங்களில் நமது தேசத்திற்குள்ள குறைகளை நிவிர்த்திசெய்ய ஆசைப்படுகிற நமது சுதேசிகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கேற்ற நல்ல அநுகூலங்கள் முன் எக்காலத்திலும் இராத வண்ணமாய் இக்காலத்தில் உண்டாயிருப்பதைக் காணலாம். நமது தேச அபிவிர்த்திக்குரிய இவ்வநுகூலங்களெல்லாம் இப்போதுள்ள இந்துவாலிபருக்கு உண்டாயிருக்கின்றன. அவர்கள் அவற்றைப் பிரயோஜனப்படுத்தி தேசத்திற்கு நன்மைசெய்யவேண்டியது அவர்கள்மேல் சுமந்த பெரிய கடமை. இப்போது இத்தேசத்தின் காரியங்களைப் பார்த்துவருகிற முதியோர் கொஞ்சக்காலத்திற்குள் தங்கள் வேலைகளைவிட்டு ஓய்ந்துபோக, வாலிபர்களே அவர்கள் ஸ்தானங்களுக்கு வந்து அவர்களுடைய வேலைகளை ஒப்புக்கொள்ளுவார்கள்; ஆகையால் இந்துவாலிபர்மேல் சுமந்திருக்கிற உத்தரவாதம் மகா பெரியது. அவர்கள் தங்கள் நல்லறிவு, விவேகம், நற்குணம், நல்நடத்தைகளினால் தேசத்திற்கு வெகு நன்மைகளையும், தங்களுக்குப் பெரும் புகழையும் உண்டாக்கலாம். அப்படிக்கில்லாமல் அவர்கள் தங்கள் கடமைகளை அசட்டைபண்ணி வீண் காலக்ஷேபஞ்செய்து வருவார்களானால், தேசத்திற்குத் தீமையையும், தங்கள்பேரில் பழியையும், அபகீர்த்தியையும் வருவிப்பார்கள்; ஆகையால் இந்துவாலிபர்கள் தங்கள்மேல் சுமந்திருக்கிற கடமைகளைக் குறைவற நிறைவேற்றுவதற்கு வழி ஏதென்றும், பிரயோகிக்கவேண்டிய எத்தனங்கள் எவையென்றும் விசாரித்தறிவது மிக அவசியமானகாரியம்.

முதலாவது: எல்லாவற்றிற்கும் பிரதானமாய் இந்துவாலிபர் தாங்கள் இத்தேசத்தில் செய்யவேண்டிய கடமைகளையும், தங்கள் மேல் சுமந்திருக்கிற உத்தரவாதத்தையும் பற்றி நன்றாய்ச் சிந்தித்து

உணரவேண்டும். வாலிபர் தங்களைப்பற்றியும், தங்கள் கடமைகளைப்பற்றியும் நிர்ச்சிந்தையுள்ளவர்களாயிருப்பார்களானால், அவர்களுடைய ஜீவகாலம் வியர்த்தமாய்ப்போய், அவர்கள் நன்மையும் பிரயோஜனமுமானதொன்றையும் செய்துமுடிக்க இடமிராது. நமது தேசத்தில் எண்ணிறந்த வாலிபருடைய ஸ்திதி இவ்விதமாய்த்தான் இருக்கிறது. அவர்கள் யாதொரு நல்யோசனையும் பண்ணாமல், நிர்விசாரிகளாய் அந்தந்த நேரத்தில் தற்கால சந்தோஷம், வேடிக்கை முதலியவை எவும் வழிகளிலெல்லாமம எண்ணமற்றுச செல்லுவதே அவர்கள் தீர்மானம்போலும். இப்படிப்பட்ட நிர்சசிந்தையுள்ள உல்லாசப் பிரியர்களால் தேசத்திற்குத் தீமையே ஒழிய நன்மையொன்றும் விளையாது. அவர்கள் தங்கள் சொல்பகால உல்லாசத்தை அனுபவித்துவிட்டுச் சென்றுபோன பின், அவர்கள் பிறநததும் இருந்ததும தெரியாமல் ஜனங்கள் அவர்களை முற்றும் மறநதுவிடுவார்கள், இதுவே அவர்கள் சரிததிர முடிவு. இது புததிவிவேகத்தையுடைய மனுஷனுக்கேற்றதல்ல. நமது தேசத்தில் அநேக வாலிபர்கள் அப்பிரயோஜனமுள்ளவர்களாய் வீண்காலம் போக்கிக்கொண்டு, பிறரால் நன்குமதிக்கப்படாமல் எவராலும் இகழப்படுவதற்குக் காரணம், அவர்கள் தங்கள் நடக்கைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலைப்படாமலும், பிரயோஜனமாயும் கௌரவமாயும் காலத்தைச் செலவழிக்கும் வகை ஏதென்று சிந்தியாமலுமிருப்பதே. இவ்வித கனானமுள்ள ஸ்திதியிலிருக்கும் வாலிபர் சிந்தித்து நடப்பார்களேயாகில், அவர்களுடைய நிலைமை வெகுவாய் வேறுபட்டிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் ஒவ்வொரு வாலிபனும் என் நிலைமை எப்படியிருக்கிறது? என்பேரில் சுமந்திருக்கிற கடமைகளெவை? எனக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாய் நடக்கும் விதமெபபடி? நலலோரால் மதிப்பையும், கனத்தையும பெற்று ஒழுகும் வழி எது? நான் செய்யவேண்டிய கடமைகளைச சரிவரச் செய்துமுடிப்பதற்கு எத்தனங்கள அநுகூலங்களெவை? என இவைபோலொத்த கேள்விகளைத் தன்னிடங்கேட்பது மிகவும் அவசியமானகாரியம்.

(இன்னும் வரும்.)

விஷப்பாம்புகள்—பாம்புகடி விஷத்திற் குப் பக்குவம்.

பாம்புகளில் அநேக வகையுண்டு. இதுவரையில் சாஸ்திரி கள் ஏறக்குறைய (270) இருநூற்று எழுபது வெவ்வேறு வகை யான பாம்புகளுண்டென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவற்றில் உத்தேசம் (60) அறுபது வகைப் பாம்புகள் விஷமுள்ளவைகள்; மற்றஜாதிப் பாம்புகளெல்லாம் விஷமற்றவைகள். அந்த அறுபது வகை விஷப்பாம்புகளில் நமது தேசத்தில் சாதாரணமாயுள்ள நல் லபாம்பும், அமெரிக்கா கண்டத்திலுள்ள ராட்டில் ஸ்னேக் என்ற பாம்பும், இவற்றைத் தவிர வேறு இரண்டொருவகைப் பாம்புக ளும் மகா கொடிய விஷமுள்ளவைகள்.

இது விஷமுள்ள பாம்பு, இது விஷமற்றது என்று நாம் பகுத் தறியும் வகை என்னவெனில்: விஷமற்ற பாம்புகளுக்கெல்லாம் மேல்வாயில் உள்வரிசை வெளிவரிசை என இரண்டுவரிசைப் பற் களுண்டு; விஷமுள்ள பாம்புகளுக்கோ மேல்வாயில் ஒரே ஒரு வரிசைப் பற்கள்மாத்திரமிருக்கும். விஷமற்ற பாம்புகளின் மேல் வாயிலுள்ள வெளிவரிசைப் பற்களுக்குப் பதிலாக விஷப்பாம்புக ளுக்கு மேல்வாயில் பக்கத்திற்கு ஒரு விஷப்பல் அல்லது நச்சுப் பல் இருக்கும். இந்த நச்சுப்பற்கள் மற்றப் பற்களைப்பார்க்கிலும் பெரிதானவைகளும், அடிதுவக்கி நுனிவரைக்கும் உள்ளே துவார முள்ளவைகளுமாயிருக்கும். நச்சுப்பல்லின் அடியில் அதனோடு ஒட்டி விஷநீர் ஊறி நிறைந்திருக்கும் பையொன்று பதிந்திருக்கும். பாம்பு கோபங்கொள்ளாத சாதாரணவேளைகளில் நச்சுப்பற்கள் மற்றப் பற்களைப்போல நட்டமாய் நிற்காமல் மேல்வாயில் படிந் திருக்கும். அது கோபங்கொண்டு ஒரு ஜெந்துவைக் கடிக்க எத்த னித்தவுடனே நச்சுப்பற்கள் நிமிர்ந்துகொள்ளும். கடித்தவுடனே விஷப்பை நெருக்கப்பட்டு, அதிலுள்ள விஷமானது நச்சுப்பல் லின் துவாரத்தின் வழியாகக் கடிவாயில் இறங்கி, அங்கிருந்து கடிபட்ட ஜெந்துவின் இரத்தமெங்கும் வியாபித்து, சீக்கிரத்தில் அதற்குப் பிராணச்சேதத்தை உண்டாக்கிவிடும். நச்சுப்பல் எக் காரணத்தினாலாவது விழுந்துபோமானால், கொஞ்சக்காலத்திற்குள் அதிருந்த இடத்தில் வேறொரு புதிய நச்சுப்பல் முளைக்கும்.

நல்லபாம்பு முதலிய சில விஷப்பாம்புகளின் கடியினால் அதி சீக்கிரத்தில் மரணம் சம்பவிக்கும். இவ்விதப் பாம்புகளின் நச்சுப்பற்கள் பூரணமாய் வளர்ந்தும், விஷப்பைகள் நீர்நிறைந்துமிருக்கையில், அவைகள் ஒரு மனுஷனைப் பலமாய்க் கடிக்குமானால் அம்மனுஷனுக்கு உடனே தகுந்த வைத்திய பக்குவங்களைச் செய்யாவிடில் அவன் உயிர் பிழைப்பது கூடாதகாரியம்.

பாம்புகடிவிஷத்திற்குச் செய்யக்கூடிய பக்குவங்களிலெல்லாம் அதிக சித்திதரக்கூடியவற்றை இதனடியில் விவரித்துக் காட்டியிருக்கிறது. அவற்றை யாவரும் நன்றாய்க் கிரகித்துக்கொண்டு, வேண்டிய சமயங்களில் அவற்றின்படி செய்வார்களேயானால் அதிகப் பிரயோஜனமுண்டாகும்.

முதலாவது: பாம்பு கடித்தவுடனே சற்றென்கிலும் தாமதியாமல் கடிவாய்க்குமேலே பலமான கயிற்றைக்கொண்டு இறுக்கிக் கட்டவேண்டும்; இப்படிச் செய்வது, விஷம் மேலேறி இரத்தம் எங்கும் கலந்துபோகாதபடி தடைபண்ணும்.

இரண்டாவது: கூர்மையான கத்தியினால் விஷப்பல் பட்ட தோலின் பாகத்தை நன்றாய் அறுத்து எறிந்துவிடவேண்டும். பல் பதிந்திருக்கிறதைப்பார்க்கிலும் அதிக ஆழமாய்த் தோலை அறுக்க வேண்டும. இப்படித் தோலை அறுத்தெறியக்கூடாவிட்டால் கடிவாயைக் கத்தியினால் பெரிதாக்கி, இரத்தம் அதிகமாய்ப் பாயும்படி செய்யவேண்டும். விஷப்பாம்பின் கடியினால் மிகுந்த நோவுண்டாயிருக்குமாகையால், கத்தியினாலுண்டாகும் நோவு சொல்பமாய்த் தோன்றும்.

மூன்றாவது: இரண்டுமூன்றுபேர்கள் மாற்றிமாற்றி காயத்தில் வாய்வைத்து, விஷங்கலந்த இரத்தத்தைப் பலமாய் உறிஞ்சி உறிஞ்சிக் கீழே துப்பவேண்டும். உறிஞ்சுகிறவனுடைய வாயில் காயமாவது புண்ணாவது இல்லாத விஷயததில், அதில் விஷம் படுவதினால் யாதொரு மோசமுமில்லை; பாம்பின் விஷத்தை விழுங்கினாலும் மோசம் வராது. காயம் அல்லது புண்ணின்வழியாய் விஷம் இரத்தத்தில் சேருவதினால்மாத்திரம் மோசம் சம்பவிக்குமேயொழிய, மற்றப்படி ஒன்றுமில்லை.

நான்காவது: வெந்நீரினால் காயததை இரண்டுமூன்றுதடவை நன்றாய்க் கழுவிவிட்டு, பின்பு (Liquor Ammonia) லைக்குவர் அம்

மோனியா (Liquor Pottassæ) லைக்குவர் பொட்டாசி என்ற இரண்டு மருந்துகளில் ஒன்றைக் காயத்தில் தாராளமாய்த் தடவவேண்டும்; அல்லது பழுக்கக் காய்ச்சின இரும்பினால் காயத்தை நன்றாய்ச் சுட்டுவிடலாம்.

ஐந்தாவது: லைக்குவா பொட்டாசி அல்லது லைககுவர் அம்மோனியா என்ற மருந்தில், பெரிய ஆளானால் இருபது அல்லது முப்பது துளிகளும், கொஞ்சம் பிராந்தி அலலது நல்ல நாட்டுச சாராயமும் வெந்நீரில் கலநது உள்ளுக்குக் கொடுக்கவும். மயக்கம் முதலிய கெட்ட குறிகளுக்குத் தக்கபடி இம்மருந்துகளை அடிக்கடி அதிகமாய்க் கொடுத்துவரவேண்டும். தேகபலத்திற்காக பால் சூப்பு முதலியவற்றையும் அவசியத்திற்குத் தக்கபடி கொடுத்துவரலாம்.

சென்னபட்டணத்தில் (Dr. J. Shortt) டாக்ட்டர் ஜான் ஷார்ட் என்னும் வைத்தியர் சென்ற இரண்டு வருஷக்காலமாய் நல்லபாம்பின் விஷத்திற்குத் தகுந்த அவுஷதத்தைக் கண்டுபிடிக்கும்பொருட்டு, பலவித பரிக்ஷைகளைச் செய்துவருகிறார் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். அவருடைய பரிக்ஷைகளுக்காக நல்லபாம்புகளை வாடிக்கையாய்ப் பிடித்துக்கொண்டுவந்து கொடுத்த பாம்புக்காரனை சென்ற ஜனுவரிமீ 8வ அவ்வைத்தியர் வீட்டில் அவன் குடத்திற்குள் அடைத்திருந்த ஒரு பெரிய நல்லபாம்பை வெளியே எடுத்துக்காட்டி மறுபடியும் குடத்திற்குள் விட்டு மூடப்போகிற தறுவாயில், பாம்பானது சீறிப் பாய்ந்து அவனை இடது கையின் சுண்டுவிரலில் பலமாய்க் கடித்துவிட்டது. அப்பாம்பிற்குப் பூரணமாய் வளர்ந்த நச்சுப்பற்களிருநதன. அதன் பற்களிரண்டு பலமாய் விரலில் பதிந்திருந்தன. இப்படி நடநததைக கேள்விப்பட்டு அந்த வைத்தியர் உடனே ஓடிவந்து, தம்முடைய கழுத்தில் கிடந்த கண்ணாடிக் கயிற்றை அறுத்து, விரலின் அடியில் ஒரு கட்டும், மணிக்கையில் ஒரு கட்டுமாக இறுக்கிக் கட்டி, விரலிலுள்ள இரண்டு கடிவாய்களையும் பென்கத்தியினால் கால் அங்குல நீளம் தாராளமாய் அறுத்துவிட்டு, பின்பு கடிவாய்களில் மாற்றி மாற்றி வாய்வைத்து விஷங்கலந்த இரத்தத்தைப் பலமாய் உறிஞ்சிக் கீழே உமிழ்ந்தார்.

இப்படிக் கொஞ்சநேரம் செய்துவிட்டுக் காயங்களை வெந்நீரினால் நன்றாய்க் கழுவி, (Liquor Pottasæ) லைக்குவர் பொட்டாசி

என்னும் மருந்தை அவற்றில் தாராளமாய்த் தடவினார். பின்பு. வெந்நீரில் பிராந்தியையும், லைக்குவர் பொட்டாசி என்னும் மருந்தையுங் கலந்து அடிக்கடிக் கொடுத்துவந்தார். பிராணமோசத்திற்குள்ளாயிருந்த அவன் இவவித பக்குவங்களினால் சீக்கிரத்தில் சுகப்பட்டான்; ஆனால் அவ்வைத்தியர் ஒன்றியாகவே விஷம பட்ட காயஙகளில வாய்வைத்து உறிஞ்சினதினால், விஷத்தின் கொடூரத்தினிமித்தம் மறுநாள் அவருடைய வாயில் கொஞ்சம் வீக்கமும், உதட்டில் சிறு கொப்பளங்களும் உண்டாயின; ஆகிலும அவை அவருக்கு யாதொரு மோசமுஞ்செய்யாமல் சில நாளைக்குள் நீங்கிபபோயின.

பூகோளயாத்திரை.

(தொடர்ச்சி.)

இந்த ராக்ஷதனுக்குச் செய்யப்பட்ட உபசாரங்களைக் கேள்வியுற்று அவன் கூட்டத்தாரில் வேறு சிலரும் கப்பலுக்கு வரத்துப் போககாயிருகக இடமுண்டாயிற்று. அவர்கள் கிர்த்தியங்கள் கப்பலாட்களுக்கு வெகு வேடிக்கையும் விளையாட்டுமாயிருந்தது. அவர்களில் ஒருவன் ஒரு கூடைநிறைந்த பலகாரங்களைத் தின்று, ஒரு பெரிய பாத்திரம நிறைந்த தண்ணீரையும பருகினான். முன் விவரித்தபடி அந்த வனசரர், ஐரோப்பிய ஜாதியார் அவர்களைப் பார்க்கிலும் அதிக காத்திரமுள்ளவர்கள். அவர்கள் சரீரத்தின் மேல் பலவர்ணங்கள் பூசி விகாரரூபங்கள் கீறியிருந்தது. அவர்கள் கபபலுக்கு வந்த காலங்களிலெல்லாம் வில்லும் அம்பும் கையிற்கொண்டு, மிருகங்களின் தோலுடைகளைத் தரித்து, யுத்தசன்னத்தராகவே வந்தார்கள். கால்களில் பாதகுறடாவது, தோலினாற் செயயபபட்ட ஒருவிதப பாதரக்ஷையாவது தரித்திருப்பார்கள்; அதனால் அவர்களுடைய பாதம் பார்வைக்கு மிருகங்களின் கால் போலக் காணபபட்டது. இந்தக் காரணத்தையிட்டு தளகர்த்தனான மாஜிலன், "பத்தக்கோனியர்" என்ற நாமத்தை அவர்களுக்குச் சூட்டினான். பத்த என்பதற்கு ஸ்பானியபாஷையில் குளம்பு அல்லது மிருகங்களின் கால் என்று அர்த்தமாம்.

இந்தப் பத்தக்கோனியர் நிலையாய் ஒரு ஸ்தானத்தில் வசிக்கிறவர்களல்ல, பலதிசைகளிலும் அலைந்து திரிந்து, அப்போதைக்கப்

போது தோலினால் சிறுசிறு குடில்களை உண்டுபண்ணி அவை களில் குடியிருப்பார்கள். இவர்களுக்கு முக்கிய ஆகாரம், பச்சை இறைச்சியும் தித்திப்பான ஓாவகைக் கிழங்குந்தான். இவர்களில் யாருக்காவது வியாதிவந்தால் வாந்திக்குச் சாப்பிடுகிறது; இல்லையென்றால் வியாதிப்பட்ட அவயவத்தைக் கருவியினாற் சேதித்து, இரத்தம் வடியவிடுகிறது அவர்கள் வழக்கமென்று ஒரு வதந்தியுண்டு.

நிரட்சரேகைக்குத் தெக்ஷணபாகங்களில் தற்சமயத்தில் மழைகாலமாயிருந்ததினால் வசந்தகாலம் வருமட்டும் அவ்விடம் விட்டுப் பெயரக்கூடாதென்று தளகர்த்தனாகிய மாஜிலன் தீர்மானம் பண்ணினதுமன்றி, இவ்வாறு காலம் நீடிப்பதினால் போஜனபதார்த்தம் அற்றுப்போய் யாத்திரைக்கு இடையூறு சம்பவியாதபடி அவைகளைச சற்றுப் பிடித்தமாய்ச் செலவழிக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டான். இந்தக் கட்டளை கப்பலாட்களுக்குப் பிரியமில்லாதிருந்தபடியால் அவர்களுக்குள் மொறுமொறுபபுண்டாயிற்று. இந்த யாத்திரையில் மாஜிலனோடு அடிக்கடி முரணிக்கொண்டுவந்த கப்பல் தலைவர்கள் மூன்றுபேர் தங்களுக்குள் கட்டுப்பாடுசெய்து அவனைக் கொன்றுபோடும்படி ஆராலோசனை பண்ணினார்கள். தங்களை அனுப்பிய ஸ்பானியதேசத்து அரசன் அசாத்தியமான காரியங்களைச் செய்துமுடிக்கவேண்டுமென்று தங்களுக்குக் கற்பிக்கவில்லையென்றும், இதற்குமுன் யாத்திரைசெய்திருக்கிற எந்தக் கப்பல்களைப்பார்க்கிலும் இந்தக் கப்பல்கள் அதிக தூரம் வந்திருக்கின்றன என்றும், ஆகையால் உடனே ஊருக்குத் திரும்பிப்போவதே தங்களுடைய தீர்மானமென்றும் அவர்கள் வெளியிட்டார்கள்; ஆனால் மாஜிலனாகிய தளகர்த்தன் பூகோளயாத்திரை செய்தே திரும்பவேண்டுமென்று தான் ஆதியிற் கொண்டிருந்த அபிப்பிராயத்தை எவ்விதமும் நிறைவேற்ற வேண்டுமென்று நிர்ணயித்து ஒரே பிடியாய்ச் சாதித்ததினால், கப்பற்சேனைக்குள் கலகம் ஆரம்பித்துவிட்டது. உடனே மாஜிலன் கலகத்திற்குத் தலைமையாய் நின்ற கப்பல் தலைவன் ஒருவனைப் பிடித்து அவன்மேற் குற்றம்பார்த்து அவனைத் தூக்கிலே போட்டுவிட்டு, வேறொரு கப்பல தலைவனையும பின்னும சிலரையும் குற்ற

வாளிகளென்று கண்டு, அவர்களைக் கரையிலே கொண்டுபோய்க் காட்டுஜனங்களுக்குள் விட்டுவிட்டு வரும்படிசெய்தான்; அத்துடன் கலகம் அமர்ந்தது.

அப்புறம் அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, சென்ற் ஜூலியன் என்னும் துறைமுகத்தை அடுத்து அங்கே ஐந்துமாதம தங்கிநின்றார்கள். அக்காலத்தில் அவர்கள் தங்கள் யாததிரை அநுகூலமாய் முடியுமென்று நிச்சயிப்பதற்கு அவசியகமான சகல முயற்சிகளையும் செய்துகொண்டு அவ்விடம்விட்டுப் பிரயாணப்பட்டார்கள். பிரயாணப்படுமுன்னதாக தளகர்த்தனுகிய மாஜிலன் சுத்தநிகளான சுதேசிகள் இருவருக்கு விசுவாச துரோகமான பெரும் பாதகத்தைச் செய்தான். மாஜிலன் அவர்களை வேடிக்கைப்பொருளாக ஸ்பானியதேசத்துக்குக் கொண்டுபோய்க் காட்டவேண்டுமென்று அபேக்ஷித்து, அவர்கள் மகா பலசாலிகளாயிருந்தமையால் அவர்களை வலுவிற் பிடிக்கமுடியாது, தந்திரத்திலை அகபபடுத்தவேண்டுமென்று ஒரு உபாயம்பண்ணினுன். முதலாவது அவர்கள் கைநிறைய கத்திகள், மணிகள், விளையாட்டுபபண்டங்கள் இவைகளை இனமாகக் கொடுத்து, அப்புறம் நேர்த்தியான சில இரும்புவளையங்களையும் சங்கிலிகளையும் அவர்களுக்குக் காண்பித்து, அவைகளை அவர்கள் காலில் போட்டுக்கொள்ளும்படி சொன்னுன். கபடறியாத அப்பேதை மனிதர் அவைகளை நல்ல ஆபரணங்களென்று நினைத்து, கலீர்கலீர் என்கிற அவைகளின் ஓசையில் பிரியப்பட்டு, சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கிட்டுக்கொள்ளுமாப்போல் மாஜிலன் சொல்லுக்குச் சம்மதித்தார்கள்; காலிலே விலங்கு விழுந்தது; "பொய்படுமொன்றே புனைபூணும் கையறியாப், பேதை வினைமேற் கொளின்" என்பதுபோலாயிற்று. உடனே அவர்கள் தங்கள் மதியீனத்திலுல் கட்டுண்டுபோனதைக் கண்டு திடுக்கிட்டு, அதிலிருநது விடுவித்துக் கொள்ளும்படி தங்களாலானமட்டும் பிரயாசப்பட்டுப் பார்த்தார்கள்; ஒன்றும் நடவாததிலுல் கலங்கி மிகவும் பயங்கரப்படத்தக்க விதமாய்ப் பெருங் கூக்குரலிட்டுக் கதறிஞர்கள். இந்த வஞ்சனை நடந்து சற்றுநேரத்துக்குள் கரையிலிருந்த சுதேசிகள் அருகு நின்ற ஸ்பானியர் சிலர்மேற் பாய்ந்து, அவர்களில் ஒருவனைக் கொன்றுபோட்டார்கள். அப்பொழுது மாஜிலன் மகா உக்கிரங்கொண்டு, பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று தன் சேவகரில் இருபதுபே

ளை அழைத்து, நீங்கள் கரைக்குப்போய் எங்கும் அலைந்து திரிந்து தேடி, உங்களுக்குத் தென்படுகிற ஒவ்வொரு சுதேசியையும் கைப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு அல்லது அவ்விடத்திற்றானே கொன் றுபோட்டு வாருங்கள் என்று கட்டளைகொடுத்தனுப்பினன். அவர் கள் போய் இரண்டு வாரம்வரையும் எங்கும் தேடிப்பார்த்தார்கள்; ஒருவரும் அகப்படவில்லை. சுதேசிகளெல்லாரும் பயந்து உள் நாட்டுக்கு ஓடிப்போய்விட்டபடியால், இவர்கள் போனகாரியம் சித்திபெறாமல் திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

1520–ம் ஆகஸ்ட் 24உ கப்பல்கள் மறுபடியும் பாய் விரித்தோடின; காற்று வளமாய் அடித்தது. அப்படிச் சிறிதுதூரம் போகிறதற்குள் திடீரென்று ஒரு கடுங்காற்றுண்டாகி, அந்தக் கப் பல்களில் ஒன்றைக் கரைக்குத் தள்ளிவிட்டது. ஆயினும் அதிலி ருந்த ஆட்கள் பிராணச்சேதமின்றிப் பிழைத்தார்கள்; சாமான் களுக்கும் சேதம் நேரிடவில்லை. அப்புறம் அவர்கள் மீதியான நாலு கப்பல்களோடும் யாத்திரைசெய்து, சென்ற் ஜூலியன் என் னும் துறைமுகத்திலிருந்து 100 மைல் தூரத்திலிருக்கிற ஒரு நதி யைக் கிட்டினர்கள். அங்கே சுத்த ஜலமும் போஜனத்துக்கு உத வுகிற பல பதார்த்தங்களும் இருந்தபடியால், கப்பலோட்டத்துக்கு வளமான காற்று அடிக்கிற காலம் வருகிறபரியந்தம் அவ்விடத்தில் தானே தங்கியிருப்பது நல்லதென்று கண்டு கப்பல்களை நங்கூரம் போட்டு நிறுத்தினர்கள்.

அக்ற்றோபர்ீ 18உ அவர்கள் மறுபடியும் பாய்விரித்துத் தெற்குமுகமாய்த் தரையடுத்தோடுகையில், ஒரு தரைமுனையைக் கண்டுபிடித்தார்கள். அதை அவர்கள் கண்டநாள் அவர்கள் மதா சாரப்படி கன்னியாஸ்திரீகளுக்கென்று கொண்டாடப்படும் திரு நாளாயிருந்தமையால், அம்முனைக்கு வர்ஜினஸ் அல்லது கன்னி முனை என்று பேரிட்டார்கள். இந்த முனைக்குச் சமீபத்தில் சமுத் திரமானது ஒடுங்கி நீண்டு செல்லுகிறதாகத் தோன்றிற்று. உட னே மாஜிலன் அதென்னவென்று திட்டமாய்ப் பரிட்சித்து அறிந் துவரும்படி கப்பல் தலைவர்களுக்கெல்லாம் ஆக்கியாபித்து, அவர் கள் திரும்பிவருவதற்கு ஒரு காலத்தையும் குறித்து, அதுவரை யும் தானும் தன் கப்பலும் அவ்விடத்தில் அவர்கள் வரவுபார்த் துக் காத்திருக்கிறதாக வாக்குக்கொடுத்து அவர்களை அனுப்பினன். இந்தப்பிரகாரம் தளகர்த்தனுகிய மாஜிலனுடைய கப்பல் ஒன்று

தவிர, மற்ற மூன்று கப்பல்களும் இந்த அருஞ்செய்கையை நிறை வேற்றும்படி துணிந்து பாய்விரித்தோடும்போது, மாஜிலனுக்குக் கிட்டிய இனத்தான் ஒருவனால் நடத்தப்பட்ட கப்பல் ஒன்று கடல் வற்றத்தினால் வெகு விசையாய் இழுப்புண்டு, அவர்கள் போக வேண்டிய திசைநோக்கிச் செல்லாமல் வெகுதூரம் விலகிப் பின் னிட்டுத் திரும்பியது. அச்சமயத்தில் கப்பலிலிருந்த ஆட்களெல் லாம் கலங்கி, என்னசெய்கிறதென்று திகைத்து, ஐரோப்பாகண் டத்திற்குத் திரும்பிவிடுவதே உத்தமமென்று யோசனைபண்ணி, அந்தக் கப்பல் தலைவனைப் பிடித்துச் சிறைப்படுத்திக் கப்பலைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார்கள். மற்ற இரண்டு கப்பல்க ளில் ஒன்று பாறைகளும் மணல்த்திடல்களும் அடர்ந்த பெரிய குடாக்கடலொன்றைக் கண்டுபிடித்தது. மற்றொன்று யாதொரு இடையூறுமின்றி மூன்றுநாள் இரவும்பகலும் ஓயாமல் பாய்விரித தோடிற்று. ஓடும்போது கடல் மெத்த ஆழமாயிருக்கவும், இரு பக்கமும் கரைதெரியவும், அவைகளில் உன்னதமான மலைகளி ருக்கவும் கண்டார்கள். கடலினுடைய ஏற்றவற்றமும் வித்தியா சப்பட்டிருந்தன. இத்தியாதி ஏதுக்களைக்கொண்டு அவர்கள் தாங் கள் போகும்வழி எவ்விதமும் இரண்டு பெருஞ்சமுத்திரங்களுக்கு மத்தியிலுள்ள ஒரு ஜலசந்தியாகவே இருக்கவேண்டுமென்றும், அது (அக்காலததில் அவர்களுக்கு பாஸிபிக் சமுத்திரம் தெரியா திருந்தபடியால்) இந்து சமுத்திரத்தையும் அத்லாந்திக்சமுத்திரத் தையும் இணைக்கிற ஜலசந்தியே என்றும் நிச்சயித்தார்கள்.

காரியாதிகளெல்லாம் இவ்வளவு வாய்ப்பாயும் அநுகூலமாயும் இருக்கக் கண்டபோதிலும், மாஜிலன் அமைக்கமுடியாத தனது ஆசையினால் திடீரென்று அவ்விடத்தைவிட்டுப் புறப்படவில்லை. முந்தி ஒரு கப்பல் ஐரோப்பா கண்டத்திற்குத் திரும்பிவிட்டது என்று சொன்னோமே; அந்தக் கப்பல் வரும் வருமென்று வழி பார்த்துக் காத்திருந்தான். தான் அவர்களுக்கு முன் குறித்தி ருந்த காலமும் கடந்து வெகுநாளாயிற்று; ஆதலால் இனி என்ன செய்கிறது என்று மற்றக் கப்பல் தலைவர்களுடன் ஆலோசித்தான். அவர்கள் நாம் இனிமேல் காத்திருப்பது விருதா; புறப்படுவதே கருமம் என்றார்கள். அதன்பேரில் தளகர்த்தனாகிய மாஜிலன் அந்த ஜலசந்திவழியாய்க் கப்பலை நடத்தினான். அந்நாள்முதல் அதற்கு மாஜிலன் ஜலசந்தி என்று பேராயிற்று. இச்சலசந்தி நிர்ட்ச

ரேகைக்குத் தெற்கு ஐம்பத்திரண்டாவது பாகையிலிருக்கிறது. இதன் நீளம் முந்நூற்றுமுப்பது மைல்; அகலம் சிலசில இடங்களில மிக விசாலமாயிருந்தாலும் பெரும்பாலும் ஒன்றரை அல்லது இரண்டு மைலுக்கு அதிகமில்லை. அதன் இருகரையிலும் பூமியானது உயர்ந்து காடுமேடுமாயிருந்தது. இக்கடல் வாய்க்கால் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து (150) நூற்றைம்பது மைல் மேற்கே போனால் அங்குள்ள மலைகளிலெல்லாம் பனி அமோகமாய் நிறைந்திருக்கக் காணலாம்; ஆனாலும் அநேக இடங்களில கரையருகேயிருக்கிற தாழ்நிலங்களெல்லாம் பல செடிகளாலும் விருட்சங்களாலும் நிறைந்து, இருகரையும் பசேரென்று பார்வைக்கு மிக அழகாயும் பல விநோதக்காட்சியாயும் இருந்தன.

இந்த ஜலசந்தியில் மாஜிலனும் அவன் கூட்டாளிகளும் ஆறு வாரம் பாய்விரித்தோடினார்கள்; ஒடும்போது, இதோ அவர்களுக்குமுன் பிரமாண்டமான சமுத்திரமொன்று காணப்பட்டது. மேற்குமுகமாய்ச் செல்லுகிற அவர்களுக்கு இடதுபக்கத்திலிருந்த கரையானது மேல்கோடியிலுள்ள ஒரு தரைமுனையில் முடிந்துவிட்டது. வலப்பக்கத்திலிருந்த தென்அமெரிக்கா கண்டத்துக் கரையானது வடதிசைநோக்கிச் சென்றது. இதனால் அது ஒரு பெரும் சமுத்திரமேயன்றி வேறில்லையென்று நிச்சயம் பிறந்தது. இந்தப்பிரகாரம் பாஸிபிக் சமுத்திரமாகிய அதைக் கண்டவுடனே தளகர்த்தனாகிய மாஜிலனுக்கு உண்டாகிய மகிழ்ச்சி இவ்வளவென்று சொல்லிமுடியாது. ஆநந்த சமுத்திரத்தில் மூழ்கினவன் போலானான். இவன்தான் முதல்முதல் பாஸிபிக் சமுத்திரததில் பாய்விரித்தோடிய ஐரோப்பியன். இவன் இந்தச் சமுத்திரத்தில் பிரவேசித்த தினம் 1520-ம் ஹு நவெம்பர்மீ 28௳.

(இன்னும் வரும்.)

பிலிப் சிட்னிப் பிரபு—அபூர்வ தயாள சிந்தை.

மகா கீர்த்திப்பிரதாபமடைந்திருந்த சேனைத்தலைவராகிய (Sir Philip Sidney) சிட்னிப் பிரபு, ஒருவிசை யுத்தகளததிலிருக்கையில், சத்துருவின் துப்பாக்கிகுண்டானது அவர் தொடையில் பட்டு எலும்பை முறித்துவிட்டது. உடனே அவருடைய

ஆட்கள் ஓடிவந்து சற்று தூரத்திலிருந்த பாளயத்திற்கு அவரைச் சுமந்துகொண்டுபோனார்கள். காயத்தின் மிகுந்த வேதனையினாலும், அதினின்று வடிந்த ஏராளமான இரததத்தினாலும், வெயிலின் அகோரமான உஷ்ணத்தினாலும் அவர் மிகவுஞ் சோர்ந்துபோய்க் கொடிய தாகமுள்ளவராய்த் தமது ஆட்களைப் பார்த்து: தாகசாந்திக்குத் தண்ணீர் கொண்டுவரும்படி சொல்ல, அவர்கள் திவிரிதநோடி ஒரு பாத்திரததில் தண்ணீர் கொண்டுவநதார்கள். ஆவலோடு அவர் அப்பாத்திரத்தையெடுத்து வாயில் வைத்துப் பானம்பண்ணப்போகுந்தறுவாயில், யுத்தகளத்தில் படுகாயப்பட்டு பரிதாபஸ்திதியிலிருந்த ஒரு போர்ச்சேவகனை அவருக்குச் சமீபமாகச் சுமந்துகொண்டு போனார்கள். அவன் தன் ரணவேதனையினால் மிகசசோர்ந்து சகிக்கக்கூடாத கொடிய தாகமுள்ளவனாய், தனக்கு யார் அச்சமயத்தில் தண்ணீர்கொண்டுவந்து தாகசாநதி செய்யப் போகிறார்கள் எனற பாவனையாய் தன் தளகர்த்தனாகிய சிட்னிப்பிரபு பானம்பண்ணப்போகும் தண்ணீர்ப் பாத்திரத்தை மிகுந்த ஆவலோடு அண்ணாநதுபார்த்தான். ● மகா தயாளகுணமுள்ள அப்பிரபு அதைக் கண்டவுடனே அவருடைய இருதயம் இரக்கத்தினால் மெழுகுபோல் இளகிற்று. அவர் அத்தண்ணீரைப் பானம்பண்ணாமல், பாத்திரத்தைக் காயப்பட்ட போர்ச்சேவகன் கையில் எட்டிக்கொடுத்து: "நீ இதை வாங்கிப் பானம்பண்ணு, உன் வேதனை எனதிலும் பெரிது" என்றார்.

மனுஷ முகம், மனுஷ சப்தம்.

உலகத்திலே மனுஷருடைய முகங்களிலும், சப்தங்களிலும், கை அட்சரங்களிலும் அமைந்துகிடக்கிற பேதங்களைச் சற்று ஆழ்ந்து சிந்திப்போமானால், அவை மிகவும் பிரம்மிக்கத்தக்க போதிசயத்தை விளைவிக்கும். முகபேதம், சப்தபேதம், அட்சரபேதமாகிய இவைகளை ஐயந்திரியின்றிப் பரிஷ்காரமாயும், அதிசுலபமாயும், எவரும் அறிந்துகொள்ளக் கூடுமானாலும், அப்பேதங்கள் இன்னகாரணததினால் உண்டாகின்றன என்று வரையறுத்துமொழிவது ஒருவருக்கும் எளிதல்ல; அப்பேதங்கள் அவ்வளவு நுண்

மையும் சூட்சமமுமாயிருக்கின்றன. மனுஷருடைய முகங்கள் கறுப்பு வெள்ளை முதலிய நிறத்தினால் பேதப்படுகின்றன என்போமா? ஒரே நிறமான முகங்களைக் கோடாகோடி காணலாம். வட்டம், நீள முதலிய வடிவத்தினால்தான் அவ்வித்தியாசங்கள் உண்டுபடுகின்றன என்போமானால், ஒரே அளவும் பிரமாணமுமுள்ள முகங்களை லட்சாதிலட்சம் காணலாம். அச்சின்வழியாய்ப் பதியும் அட்சரம்போலும, கருமூலமாய் வாக்கும் கலங்களைபோலும; பிதா மாதா வழியாய் உற்பத்தியாகும் புத்திரபுத்திரிகள் பெற்றோருடைய அச்சடையாளங்களைப் பொருந்தி, பெரும்பாலும் அவர்கள் சாடையாகவே இருப்பினும், அவ்விருதிறத்தாருக்குமுள்ள முகரூபவித்தியாசம் எவ்வளவு பெரிது, எவ்வளவு தெளிவு, எவ்வளவு லகுவில் அறிந்துகொள்ளக் கூடியது.

மனுஷருடைய சப்தம் வாத்தியப்பெட்டிபோல ஆச்சரியமான விதமாய்ச் சமைந்திருக்கிற கண்டத்திலிருந்து உற்பத்தியாகின்றன. கண்டத்தின் கருவி கரணாதிகளெல்லாம் சமஸ்த ஜனங்களுக்கும் ஏறக்குறைய ஒன்றுபோலவேயிருப்பினும், அதிலிருநது பிறக்கும் தொனியானது எத்தனை அநந்த பேதப்படுகிறது. அப்பேதங்கள் நாவினால் விவரிக்கமுடியாத மகா நுண்ணிதாயும், மனதினாலும் கிரகிக்கக்கூடாத அதிசூட்சமமாயுமிருந்தபோதிலும், அவைகள் ஏவ்வளவு துரிதமாய் நமது செவிக்குப பலப்படுகின்றன. எவ்வளவு பலமாயும் பரிஷ்காரமாயும நமது புத்தியில் அழுந்திப் பதிகின்றன. இரண்டு கண்ணும் தெரியாத பிறவிக்குருடனும், சப்தபேதத்தினாலே இவன் இன்னான, இவன் இன்னான் என்று பகுத்தறிந்துகொள்ளுகிறான். 20, 30 வருஷங்களுக்குமுன் அவன் கேட்டிருந்த குரலோசையினால் ஆள் இன்னாரென்று ஓர் க்ஷணகாலத்தில் இனந்தெரிந்துகொள்ளுகிறான். மனுஷதொனியின் விகற்பம் அவவளவு தெளிவாய் அவன் புத்தியில் பதிந்திருக்கின்றன. இது எத்தனை ஆச்சரியம்.

ஒருவன் கட்டிய வீடுபோல இன்னொருவன் கட்டுகிறான். ஒருவன் செய்த பெட்டிபோல இன்னொருவனும் செய்கிறான். ஒருவன் செய்த ஒரு செயல்போல இன்னொருவனும் செய்கிறது அரிதல்ல; ஆனால் ஒருவன் எழுதிய எழுத்துப்போல இன்னொருவன் நாலுவரியாவது எழுதிக்கொள்ளமாட்டான். ஏன்? இதற்கு முகாந்தரமென்ன? இப்பேதங்களால் பிரயோஜனம் யாது?

இந்தப் பேதங்கள்மாத்திரம் உலகத்தில் இல்லாவிட்டால், இவைகள் இவ்வளவு தெளிவும் நிச்சந்தேகமானவைகளுமாயிராவிட்டால், அப்பொழுது இவ்வுலகில் உண்டுபடும் புரளியையும், குழப்பத்தையும், கேட்டையும் கூற வல்லவன் யார்? முகங்களும், சப்தங்களும், கை அட்சரங்களும் ஒன்றற்கொன்று அபேதமாய், ஒருவன் முகத்தைப் பார்த்ததுபோல இன்னொருவன் முகமும், ஒருவன் சப்தம்போல இன்னொருவன் சப்தமும், ஒருவன் எழுதிய கை அட்சரம்போல இன்னொருவனுடையதும் இருக்குமானல், அப்பொழுது ஸ்திரீ புருஷன், பிதா புத்திரன், குரு சிஷன், சத்துரு மித்துரு, ஆண் பெண் என்கிற பேதந்தான் எது? இன்னானுக்கு இன்னது சொந்தம் என்கிற பாத்தியதைகள்தான் எங்கே? வழக்கு வியாஜ்ஜியங்களுக்கு முடிவேது? நீதிநியாயம் கிடையாது. எல்லாம் அநிச்சயமும் ஆதாரவற்றதுமாகி, கட்டும் காவலும் இழந்து, சமஸ்தமும் தலைநடுமாறிக் கெடும்; பகையும் பொறாமையும் மேலிடும், சூதும், கபடும், துன்மார்க்கமும் பெருகும்; சகல தர்மங்களும் தாறுமாறாகிவிடும்; உலகமும் நடைபெறாது.

ஆனல் மேற்காட்டிய முகபேத, சப்தபேத, அட்சரபேதங்களாகிய உண்மை விளக்கும் சாதனங்கள் இவ்வுலகில் தேவநிர்மிதமாய் அமைந்திருக்கின்றமையால், சகல காரியங்களும் சீரும் செம்மையுமாய் நடந்தேறவும், நீதிநியாயங்கள் கிடைக்கவும், சமாதான சௌக்கியமாய் வாழ்ந்திருக்கவும் வகைகாண்கிறோம். முகம் வெளிச்சத்தில் ஒருவனை இன்னானென்று காட்டுகிறது. சப்தம் இருளில் இனம் தெரிவிக்கிறது. கை அட்சரமோ ஒருவன் கண்ணெதிரில்லாத சமயங்களிலும், அவன் இறந்துபோனபின்பும் அவனைக்குறித்துச் சாட்சிபகருகிறது. ஆச்சரியமாய் விளங்காநின்ற இப்பேதங்களெல்லாம் இவ்வுலகம் செவ்வே நடைபெறும்பொருட்டு அமைத்துவைத்த அநந்தகல்யாண குணங்களையுடைய கடவுளின் அதிசய ஞானத்தை விளக்குகின்றன அல்லவா?

கடற்பறவை பிடிக்கப்போன வேடர்.

ஒருநாள் ஒரு வேடன் தன் புத்திரர் இருவரோடு வனத்தில் வேட்டைக்குப் போனன். அவ்விடத்தில் உயர்ந்த செங்குத்தான பர்வதம் ஒன்றிருந்தது. அவர்கள் மூவரும் அதன் கொடுமுடியில் ஏறி,

அங்கே ஓரிடத்தில் ஒரு கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டு, அதன் வழியாய்க் கீழே இறங்கினார்கள். அம்மலையின் செங்குத்தான பக்கத்திலிருக்கிற குகைகளில் கடற்பறவைகள் வந்து முட்டையிடும். இவர்கள் எப்போதும் ஒரு கயிற்றின்வழியாய் இறங்கி, அக்குகைகளிற் போய் அங்கிருக்கும் பறவைகளையும் அவற்றின் முட்டைகளையும் எடுத்துக்கொண்டுபோவது வழக்கம். அந்தப் படியே அன்றைத்தினம் அவர்கள் மூவரும் தாங்கள் சுமக்கக் கூடியமட்டும் பறவைகளையும் முட்டைகளையும் எடுத்துக்கொண்டு, எப்போதும்போல அந்தக் கயிற்றின்வழியாய் உயர ஏறினார்கள். முதலாவது மூத்தமகன், அவனுக்கு நாலுபாகத்திற்குக் கீழே இளைய மகன், கடைசியில் தகப்பன், ஆக மூவரும் ஒருவர்பின் ஒருவராக அந்த ஒரே கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறி பாதித்தூரம்வரை யும் சென்றார்கள். அப்போது மூத்தகுமாரன் மேலே ஏறிட்டுப் பார்த்தான்; அந்தக் கயிறு விலகி ஒரு பாறையின் கூர்மையான ஓரத்தில் உரசி முறுக்கு நெகிழ்ந்து, இரண்டொரு புரியும் அறுந்து விட்டது, மீதியான புரிகளும் அறுந்துகொண்டே வருகிறது. இந்தப் பயங்கரமான காட்சியைக் கண்டவுடனே கலங்கித் திடுக் கிட்டு, அவன் தன் தகப்பனுக்கு அதை அறிவித்தான்.

தகப்பன் அவனிடத்தில்: நாம் மலையின் உச்சியிற் போய்ச் சேரும்வரையும் கயிறு பலக்குமா என்று கேட்டான்.

அதற்கு மகன்: ஏது, பலக்காது; இன்னும் ஒரு நிமிஷத்திற் குள் அறுந்துபோம்போலிருக்கிறது; நம்மூவருடைய பாரத்தை யும் தாங்காது, க்ஷணத்தில் அற்றுப்போம் என்றான்.

உடனே தகப்பன் மகனிடத்தில்: ஒருவரையாவது தாங்குமா என்று கேட்க,

அவன்: அதுவும் சந்தேகத்தில்தானிருக்கிறது என்றான்.

அப்பொழுது தகப்பன் அவனிடத்தில்: மகனே! நம்மில் ஒரு வராவது தப்பிப் பிழைக்கட்டும்; தக்ஷணமே கத்தியை உருவி உனக்குக் கீழேயிருக்கிற கயிற்றை அறுத்துவிடு, தைரியம் விடா தே; நீயாவது பிழைத்து உன் தாய்க்கு உதவியாயிரு என்றான்.

மறுபேச்சு பேசவாவது, சற்றுத் தாமதிக்கவாவது நேரமில்லை; மரணமானது வாய்பிளந்து அம்மூவரையும் விழுங்கப்போகிறது. மூத்தமகன் மறுபடியும் உயர அண்ணாந்துபார்த்தான்: பாறை

யின் கூரானது கயிற்றை வெகுதூரம் அறுத்துவிட்டது. என்ன செய்கிறது, நடுங்கிக்கொண்டிருந்த தன் கையினால் கத்தியை உருவிக் கயிற்றை வெட்டினான். அந்தோ! தகப்பனும் சகோதரனும் கீழேயிருந்த சமுத்திரத்தில் அதோகதியாய் விழுந்து மாண்டார்கள்.

எபாமிநாந்தா—கைவாசிசுத்தம்.

கிரேக்கைதேசம் பல சுயாதீன சமஸ்தானங்களாகப் பிரிந்திருந்த பூர்வகாலத்தில் தீபெஸ் நகரத்திலே எபாமிநாந்தா என்று பேருள்ள சேனாதிபதி ஒருவன் இருந்தான். இவன் அந்நகரத்திலுள்ள உயர்ந்த குடும்பங்கள் ஒன்றில் பிறந்த ஒரு பெரிய பிரபுவின் புத்திரன். அந்தப் பிரபு தன் புத்திரனுக்கு நிலையற்ற பொருட்செல்வத்தை அல்ல, நிலைபெற்ற கல்விச்செல்வத்தையே ஆஸ்தியாகச் சம்பாதித்துவைக்கக் கருதி, கிரேக்கைதேசத்திலுள்ள கல்விமான்களில் சிறந்த வித்வசிரோமணிகளைத் தெரிந்து, ஆசிரியர்களாக நியமித்து, அவர்களிடத்தில்: அவன் இலக்கணம், இலக்கியம், அலங்காரம், கணிதமுதலிய பல சாஸ்திரங்களும் படித்துத் தேறும்படி செய்ததுமன்றி, வில்வித்தை வாள்வித்தை முதலிய யுத்தாப்பியாசங்களிலும் நிபுணனாகச் செய்திருந்தான். எபாமிநாந்தாவின் கல்விவிஷயத்தில் அவன் பிதா பணத்தினைப் பொருள் என்று பாராமல் அளவிறந்த திரவியங்களை அள்ளி இறைத்துவிட்டபடியால், அவனுடைய ஆஸ்தி வெகுவாய்க் குறைந்து போயிற்று. அதனால் எபாமிநாந்தாவுக்கு உண்டாயிருந்த முட்டுப்பாட்டை அவன் பிராணசிநேகிதனும், மிகுந்த ஸ்திதிமானுமாயிருந்த ஒரு பிரபு அறிந்து, அவனுடைய கஷ்டத்தை நிவிர்த்திக்கவேண்டும் என்று கருதி, அவனுக்கு அநேக இனாங்களை அனுப்பி, அவைகளை அங்கீகரித்துக்கொள்ளும்படி மெத்த உரிமைபாராட்டி வேண்டிக்கொண்டான். ஆனாலும் எபாமிநாந்தா தன் பிதாவைப்போலவே பொருளை ஒரு விஷயமாக நினையாமல் "கரவாது வந்தியும் கண்ணன்னார் கண்ணும், இரவாமை கோடி யுறும்" என்றபடி, எவரிடத்திலும் ஏற்பது இகழ்ச்சியென்னும் கௌரவத்தைக் கைக்கொண்டு, அந்த இனாங்களில் ஒன்றையாவது அங்கீகரியாமல் எல்லாவற்றையும் திரும்ப அனுப்பிவிட்டான்.

ஒரு சமயத்தில் பார்விய, இவனைக் கைவசப்படுத்திக்கொண்டால் தங்கள் காரியத்திற்கு மெத்த அநுகூலமென்று கண்டார்கள். அதனால் அவர்கள் ஒரு ஸ்தானபதி கையில் பெருந்தொகையான திரவியத்தைக் கொடுத்து, எபாமிநாந்தாவை எவ்விதத்திலும் வசப்படுத்தி வரவேண்டுமென்று அந்த ஸ்தானபதிக்குச் சொல்லியனுப்பினார்கள். அந்த ஸ்தானபதி வந்து இவனுடைய பெருந்தன்மையையும் நேர்மையையும் கண்டு, நேரே பேசப் பயந்து, அவன் சிநேகிதன் ஒருவனுக்கு இருபதினாயிரம் ரூபாய்வரையும் லஞ்சம் கொடுத்து, தான் வந்த காரியம் ரகசியமாய் அவன் காதில் விழும்படி செய்தான். உடனே எபாமிநாந்தாவுக்குக் கடுங்கோபம் வந்து, தன் சிநேகிதனைப் பார்த்து: நீ இவ்வுலகத்தின் ஐஸ்வரியமெல்லாம் திரட்டி என்முன் வைத்தபோதிலும், நான் என் தேசத்தின் நன்மையை நெகிழவிடமாட்டேன் என்று சொல்லிவிட்டு, பின்பு பார்விய ஸ்தானபதியை நோக்கி: நீர் இப்படிச் செய்தது அணிந்தது ஆச்சரியமல்ல; உம்மைப்போலவே நானும் இருப்பேன் என்று நினைத்து இப்படிச் செய்தீர்; ஆகிலும் நீர் என்னை நன்றாய் அறியாதவராதலால் உம்முடைய குற்றத்தை மன்னிக்கிறேன்; இவனைக் கெடுத்துப்போட்டதுபோல இன்னும் வேறொருவனையும் கெடுக்கும்படி நீர் சமயந்தேடிக்கொண்டிராமல், தக்ஷணமே இந்நகரத்தை விட்டுப் புறப்பட்டு வந்தவழியே நடந்துவிடும் என்று அனுப்பிவிட்டு, கைக்கூலி வாங்கின தன் சிநேகிதனைப் பார்த்து: நீ இந்நிமிஷமே அந்த இருபதினாயிரம் ரூபாயும் கொண்டுபோய்த் திரும்பக் கொடுத்துவிட்டுவா; இல்லையென்றால் உன்னைப் பிடித்து நியாயாதிபதியினிடத்தில் ஒப்பிப்பேன் என்றான்.

மிகுந்த தைரியமும் வல்லமையுமுள்ள யாசான் என்னும் ஓர் அரசன், தீபேனியருடன் உதவி உடன்படிக்கை செய்வதற்காக அந்நகரத்திற்கு வந்திருந்தான்; அப்போது அவன் எபாமிநாந்தாவின் சிநேகத்தை எப்படிச் சம்பாதிக்கலாம் என்று ஆலோசித்தான். எபாமிநாந்தா ஏழையாயிருக்கிறபடியால் திரவியத்தினால் அவனைக் கைவசப்படுத்தலாம்; பணம் என்றால் பிணமும் வாய் பிளக்குமே; தாரித்திரதிசையிலிருந்து கஷ்டப்படுகிற மனுஷன் பணத்தை இச்சியானோ? என்று அவன் நிச்சயித்துக்கொண்டு, எபாமிநாந்தாவுக்குச் சம்மானமாக அளவிறந்த பொருட்களை அனுப்

பினான். அப்பொழுது தேசாபிமானச் சிந்தையுள்ள அந்த வீரன்: அரசனுக்கு ஆச்சரியமும் பிரமிப்பும் உண்டாகும்படி அந்தச் சம்மானங்களையெல்லாம் குப்பைபோல் இகழ்ந்து தள்ளி விட்டதுமன்றி, அரசனது ஆட்களை நோக்கி: நீங்கள் பரிதானத்தினால் என்னைக் கெடுக்கக் கருதிக் கொண்டுவந்த இந்த வெகுமானத்தை, நீங்கள் எனக்குச் செய்த பெரிய அவமானமாகப் பாவிக்கிறேன்; இதைப்பார்க்கிலும் யுத்தத்திற்கு வாருங்கள் என்று நேரே கூப்பிடுகிறது நலமாயிருக்கும்; நான் இந்த சுயாதீன சமஸ்தானத்துக்கு ஒரு அவயவமாய்ப் பிறந்திருக்கிறதினாலே, என்னால் இயன்றமட்டும் என் நேசஸ்தருடைய சுயாதீனத்தை நிலை நிறுத்தப் பிரயாசப்படுவேனேயொழிய, என் உயிராவில் வந்தாலும் அதை விலைப்படுத்தமாட்டேன், அந்தத் துர்ச்செய்கைக்கும் எனக்கும் வெகுதூரம்; இதை அரசன் அறிந்துகொள்ளட்டும் என்று சொல்லியனுப்பினான். இந்த அரசன் சென்றதிசைகளிலெல்லாம் ஜெயம்பெற்றுத் திரும்புகிற அதிவீரபராக்கிரமனென்றும், அவனை விரோதிப்பது லேசான காரியமல்ல என்றும் தான் அறிந்திருந்தும், அஞ்சாமல் இப்படி மறுமொழி அனுப்பியதைக் கவனிக்கும்போது, எபாமினாந்தாவின் தைரியமும் திடச்சித்தமும் இவ்வளவென்று அறிந்துகொள்ளலாம்.

இதற்குச் சிலகாலத்துக்குப்பின்பு ஒரு சமஸ்தானத்திலிருந்து தினார் என்று பேருள்ள ஒருவன் வெகு திரளான வெகுமதிகளுடன் எபாமினாந்தாவினிடத்திற்கு வந்து, அவைகளை அவன் முன் வைத்து அங்கிகரித்துக்கொள்ளும்படி பிரார்த்தித்தான். அதற்கு எபாமினாந்தா: ஒருக்காலும் படாது என்று மறுக்க, தினார் என்பவன் எப்படியாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மன்றாட, இந்தப் பிரகாரம் அவ்விருவருக்கும் பெரிய போராட்டம் நேரிட்டது. அப்பொழுது எபாமினாந்தா, தினாரை நோக்கி. கேளும், சில தினங்களுக்குமுன் அரசனாகிய யாசான் சம்மானங்கள் என்று பேர் கொண்ட பரிதானத்தினால் என்னைக் கெடுக்க வகைதேடினான்; நான் அவனுடைய துரசிந்தனைக்கும் அயோக்கியத் தொழிலுக்கும் தக்க கடினமான மறுமொழிசொல்லி, அந்தச் சம்மானங்களைத் திரும்ப அனுப்பிவிட்டேன்; ஆனால் நீர் இப்பொழுது கொண்டுவந்திருக்கிற இனங்கள் அத்தன்மையுள்ளவைகளல்ல; இவைகள் உமமை அனுப்பினவர்களுடைய உதாரகுணத்தையும் தர்ம

சிந்தையையும் விளக்கிக்காட்டும் அறிகுறிகளாயிருக்கின்றன; ஆதலால் இந்த நற்செய்கைக்காக நான் உங்களை மெய்சசிப் புகழுகிறேன்; ஆனாலும் இந்த வெகுமானங்களெல்லாம் எப்படியிருக்கிறதென்றால், நல்ல சுகமும் பலமுமாயிருக்கிற மனுஷனுக்கு ஔஷதம் எப்படி அநாவசியகமாயிருக்கிறதோ, அப்படியே இவைகள் எனக்கு அவசியமில்லாதிருக்கின்றன. நோயாளிக்கல்லவோ மருந்து பயன்படும். நல்லது, இப்பொழுது நீங்களாவது, நம்முடைய சிநேகிதர்களில் வேறெந்தச சமஸ்தானத்தாராவது நாங்கள் யுத்தமின்றிச் சமாதானமாய் வாழ்ந்திருக்குங்காலத்தில், யுத்தத்தில் அபஜயப்பட்டு எங்களைக் காத்துக்கொள்ளச் சக்தியற்றுச் சங்கடப்படுகிறதாகப் பாவித்து, எங்களுக்கு உதவிசெய்யும்படி ஏராளமான சேனையையும், யுத்தாயுதங்களையும், போசனபதார்த்தங்களையும் அனுப்புவீர்களானால், நாங்கள் அவைகளை அங்கிகரித்துக்கொள்வோமா? கொண்டால் அது நியாயமென்று யார்தான் சொல்வார்கள்? அப்படியே இந்த விஷயமும் இருக்கிறது. உங்களுடைய தயாளசிந்தையும் சற்குணமும், நான் தாரித்திரத்தில் ஆழ்ந்து வருந்துகிறதாக நீங்கள் நினைக்கும்படி செய்தன; என் தாரித்திரம் எனக்குப் பாரமாயிருக்கவில்லை; என் வீட்டிற்கு வரும் விருந்தினரைத் தள்ளாது சந்தோஷமாய் உபசரிக்கிறதுபோல, என் தாரித்திரத்தையும் உபசரிக்கிறேன்; அதை எனக்கு மிகுந்த கனமும் பாக்கியமுமாகப் பாவிக்கிறேன். உமமை என்னிடத்திற்கு அனுப்பின பரோபகாரிகள் தங்கள் திரவியத்தை உத்தமமான வழியில் உபயோகப்படுத்தப் பார்க்கிறார்கள்; அது புகழப்படத்தக்கதுதான்; அதற்காக நானும் அவர்களை வியந்து வாழ்த்துகிறேன். அதுபோலவே நானும் என் தாரித்திரத்தை என்னாலானமட்டும் நல்வழியில் உபயோகப்படுத்தப் பார்க்கிறேன் என்று அவர்களிடம் சொல்லும் என்றான்.

ஆனாலும் அந்த வெகுமானங்களில் கொஞ்சமாவது எபாமினாந்தா எடுத்துக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்று தீனர் கருதி, புவனைப் பார்த்து: உமமுடைய பிதா நமமெல்லாருக்கும தர்மசாஸ்திரங்களைக் கற்பித்த லைசிஸ் என்னும் நீதினூலாசிரியருடைய ஜீவனுமசைக்கும, அந்தியகால கிரியைக்குமாக வெகுபணம் செலவுசெய்திருக்கிறார். அந்த வகையில் நாங்கள் எங்கள் பங்கானுள்ள பணத்தை உமமுடைய பிதா

வுக்குக் கொடுக்கக் கடன்பட்டிருக்கிறோம்; ஆகலால் அந்தத் தொகைக்குச் சரியான பொருட்களையாவது நீர் எடுத்துக் கொள்வது அவசியம் என்று வழக்காடினான். அதற்கு ஏபாமிநாந்தா: அந்த ஆசிரியா தாரித்திரத்தை உபயோகப்படுத்தும் சரியான வகையை என் பிதாவுக்குப் படித்துக்கொடுக்கும்படி பட்ட பிரயாசமுண்டே, அதற்கு என் தகப்பனார் செய்த செலவெல்லாம் கொஞ்சமென்கிலும ஈடல்ல; ஆகலால் என் பிதா அவருக்குப் பட்ட கடனே இன்னும தீராதிருக்க, நான் உங்களிடத்தில் கடன நண்டுவது எப்படி என்றான. இந்தப்பிரகாரம் இருவருக்கும் விவாதம் நீடித்தது. தீனா ஒன்றும் இல்லாமற்போனாலும், தான் இவ்வளவுநேரம் செய்த மன்றூட்டுக்காகவாவது கொஞ்சம் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம் என்று ஏபாமிநாந்தாவுக்கு உணர்த்தும்படி வெகு பிரயாசப்பட்டுப்பார்த்தான்; அந்தப் பிரயாசையெல்லாம் ஏபாமிநாந்தாவுடைய ஸ்திரமான நிர்ணயத்தையும் தாரித்திரத்தைச் சிலாகிக்கிற அவனுடைய சாமர்த்தியத்தையும் வெளியரங்கமாய்த் தோற்றுவிக்க ஏதுவாயிருந்ததேயொழிய, வேறில்லை. அதனால் தீனர் வாய் அடைபட்டுத் திரும்பிப்போய்விட்டான.

ஏபாமிநாந்தா இந்த விரதத்தை இவ்வளவு வைராக்கியமாய்க் கைக்கொண்டு நடப்பதற்கு முகாந்தரம் என்னவெனில்: முதலாவது லஞ்சத்தினால் தன் நடக்கை கறைபட்டுப்போகாமல் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்பதும்; இரண்டாவது தன் தேசஸ்தருக்குச் செல்வசெருக்கும் சிற்றின்பப்பிரியமும் தலைக்கொண்டுபோயிருந்தமையால், அவர்களைத் தன் போதனையினாலும் மாதிரியினாலும் சீர்ப்படுத்தவேண்டுமென்பதுமாம். பிற்காலத்தில் நன்றிகெட்ட அந்த ஜனங்கள் கட்சிப்பிரதிகட்சியினால் அவனை உத்தியோகத்தைவிட்டு நீக்கிவிட்டார்கள்; ஆனாலும் அவனுடைய உத்தமகுணத்தை அவனைவிட்டு நீக்க யாரால் முடியும். உத்தியோககாலத்தில் அவன் எப்படித் தற்பொழிவை நாடாமல் தேசநன்மையை நாடினானோ, அப்படியே உத்தியோகம் இழந்துபோன காலத்திலும் தேசநன்மையை மறந்திருக்கவில்லை. அளவிறந்த சேனைக்குத் தலைவனாய் நின்று சேனாதிபத்தியஞ்செய்த அவன், பின்பு தன் ராஜ்ஜியத்தாருடைய தண்டில சம்பளமின்றி தன்னிஷ்டமான ஒரு காலாளாக நின்று சத்துருக்களோடு சண்டைபண்

ணினன். இப்படி சுயபிரயோஜனத்தை நாடாம...
மையைத் தேடுகிறவனைப் புருஷோத்தமன் என்று சொல...
ஒவ்வொருவரும் தம்தம் காரியம் பார்க்கிறது நீதிதான்; எல...
னும், அதுகொண்டு பிறர் எப்படிப்போனாலும் எனக்கென்ன
என்று தன் காரியகுட்டியாய்மாத்திரம் ஜீவிப்பதும், தன்னொருவ
னுடைய பிரயோஜனத்தினிமித்தம் அநேக ஜனங்களுடைய நன்
மையை நெகிழவிடுவதும் தர்மமல்ல. தன் காரியத்தில் சொல்ப
நஷ்டம் நேரிட்டாலும் பெரிதல்லவென்று பரோபகாரார்த்தமாய்ப்
பொதுநன்மையைத் தேடுவதே அறிவாளிகளின் கடமை.

எடின்பரோ டியூக் பிரபு.

(Duke of Edinburgh.)

மாட்சிமைதங்கிய நமது விக்ற்றோரியா ராஜாத்தியவர்களின் புத்திரனும், ராஜபட்டத்துக்குரிய இளவரசாகிய வேல்ஸ் பிரபுவுக்குச் சகோதரருமாகிய எடின்பரோ டியூக் என்னும் ராஜகுமாரன் இத்தேசத்தின் சிறப்பையும் வளத்தையும் பார்த்துவிட்டுப்போக அபேக்ஷித்து, இங்கிலாந்து தேசத்திலிருந்து புறப்பட்டு, அவரது யாத்திரைக்கென்று வெகு விசேஷமாய் ஆயத்தஞ்செய்யப்பட்ட கலாத்தியா என்னும் சிறந்த நீராவி மரக்கலமொன்றில் ஏறி, சென்ற டிசெம்பர்மீ மத்தியில் கல்கத்தா ராஜதானியில் வந்து இறங்கினார். இந்த ராஜபிரபுவுக்குத் தகுந்த மரியாதைசெய்து கனம் பண்ணும்படி விசேஷ பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. கல்கத்தா ராஜதானியைச்சேர்ந்த பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், கிரீடாதிபதிகள் எல்லாம் ஏகோபித்துவந்து கூடினர். யானைகளும் சேனைகளும் அங்கங்கிருந்து அபரிமிதமாய் வந்தன. இந்து ராஜாக்கள், ஐரோப்பிய துரைமார்கள், கனவான்கள், தனவான்கள், வியாபாரிகள், சர்வகலாச்சாலை பரிபாலன கர்த்தாக்கள் எல்லாம் அங்கங்கு கூடி, ராஜகுமாரனை ஏற்றவாறு உபசரணைசெய்யும் விதம் ஏதென்று ஆலோசித்து சித்தஞ்செய்தார்கள். பலதிறத்தாரும் தங்கள் ராஜபக்தி விளக்கும் வந்தனப்பத்திரங்கள் எழுதி வாசித்தார்கள். இந்துராஜாக்களும், பிரபுக்களும், ஐரோப்பிய துரைமார்களும் அவரவர் தேசாசாரப்படி அரசகுமாரனுக்கு அதிக சம்பிரமமாய் விருந்து செய்வித்தனர். இவர் எவரிலும் மிகச் சிறந்தவ

ரென விசேஷிக்கும்பொருட்டு அதிமகத்துவ இந்திய நட்சத்திரப் பட்டம் இவருக்குத் தரிக்கச் சித்தஞ்செய்யப்பட்டது. அந்தக் கண்காட்சி யாவருக்கும் தெரியும்படி ஓர் பெரிய மைதானத்தில் மகா விஸ்தீரணமான கூடாரம் ஒன்று அடித்து, அதை அதி விசித்திரவிநோதமாய் அலங்கரித்தார்கள். அவ்விடத்திற்கு எடின் பரோ டியூக் பிரபு சர்வ கோலாகல சம்பிரமத்துடன் புறப்பட்டு வரும்போது, இரண்டுபக்கமும் மதில்போல ஆயுதபாணிகளான ராணுவவீரர் அணியணியாய் நின்றார்கள். ராணுவ உத்தியோகஸ்தர்களும், தளகர்த்தர்களும், அதிகாரிகளும், நியாயாதிபதிகளும் அந்த ராஜபிரபுவைச் சூழ்ந்து முன்னும் பின்னுமாக வந்தார்கள். பிரபுபத்தினிகளும், நாயகிகளும், துரைசானிகளும் சிறந்த ரதங்களின்மேலேறிச் சென்றார்கள். ராஜகுமாரன் இவ்வளவு வைபவத்துடன் கூடாரத்திற்போய்ச் சேர்ந்தார். அப்பொழுது இந்திய ராஜ பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரல் மாட்சிமைதங்கிய ராஜாத்தியவர்கள்பேரால் இந்திய நட்சத்திரப்பட்டம் அவருக்குச் சூட்டினர். அந்தக் காட்சியைக் கண்ட அனைவருடைய கண்ணும் மனமும் களித்தன.

இந்த ராஜபிரபு சென்ற ஜனுவரிஸ்ரீ துவக்கத்தில் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டு, வட இந்தியாவின் வளத்தையும், அங்குள்ள சமஸ்தானங்களையும், பல அரசர்களையும் பார்த்துவரும்படி, பருதவான், மாவிலம், வாரணாசி, அலகபாத், லக்ஷ்மணபுரி, ஆக்ரா, டில்லி, அம்பேலா, லாகூர் முதலிய இடங்களுக்குப் போயிருக்கின்றனர். அப்பிரதேசங்களெல்லாம் சுற்றிப் பார்த்துக்கொண்டு, வருகிற மார்ச்சுஸ்ரீ ஆரம்பத்தில் பம்பாய் ராஜதானிக்குப் போவார். அப்புறம் அங்கிருந்து மார்ச்சுஸ்ரீ கடைசியில் சமுத்திர வழியாய் சென்னை ராஜதானிக்கு வருவாராம். ஆதலால் சென்னையிலுள்ள சனவான்கள், பிரபுக்கள், துரைமார்கள் எல்லாம் அங்கங்கு கூடி, எடின்பரோ டியூக் பிரபுவை உபசரிக்கும் விதத்தைப் பற்றி ஆலோசனைசெய்து, பெருந்தொகையான பணம் சேகரிக்கிறார்கள். சென்றமாசக் கடைசியில் பச்சையப்பா பாடசாலையில் சுதேசப் பிரபுக்கள், கனவான்கள் கூடிய கூட்டமொன்றில், இவ் விஷயத்திற்கென்று அச்சமயத்தில் வந்திருந்த உதாரவான்கள் கையெழுத்துப்போட்ட தொகைமாத்திரம் பன்னீராயிரம் ரூபாய்க்கு

யாய் யாத்திரைசெய்கையில், சூயெஸ் பூசந்தியை அடுத்த உடன் கரையிறங்கி, அங்கிருந்து இருப்பாதைவழியாகப் பிரயாணஞ் செய்து, அதைக் கடந்தபின் வேறு நீராவி கப்பலேறி, செங்கடல் வழியாக இந்தியா முதலிய தேசங்களுக்கு வரவேண்டியிருந்தது. இக்காரணங்களினால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்கும் பிரயாணிகள், சரக்குகள் போக்குவரவு செய்வதில், வெகுவருத்தமும், காலதாமசமும், பணநஷ்டமும உண்டாயிருந்தன; இவையெல்லாம வெகுவாய்க் குறைந்து போவதற்கு இப்பொழுது ஏதுவுண்டாயிருக்கிறது; இது யாவரும் சந்தோஷப்படத்தக்க காரியம. சூயெஸ் பூசந்தியை வெட்டி (90) தொண்ணூறு மயில் நீளமும் போதுமான விஸ்தாரமுமுள்ள வாய்க்கால் ஒன்றை உண்டுபண்ணியிருக்கிறார்கள். பெரிய கப்பல்கள் தாராளமாய் ஓடத்தக்க இவ்வாய்க்காலினால் ஆசியாவோடு ஒட்டியிருந்த ஆபிரிக்கா கண்டமானது இப்பொழுது பிரிக்கப்பட்டு மகா பெரிய ஒரு தீவாயிற்று. மேலும் மெதித்திரேனியா கடலும் செங்கடலும் ஒன்றோடொன்று சந்தித்து இணைந்துகொண்டன. இவ்வாச்சரியமான வேலையைச் சித்திபெற நடப்பித்தது முடித்தது அதிசய சாமர்த்தியமுள்ள லெஸ்ஸெப்ஸ் என்னும் பிரான்ஸிய சிற்பசாஸ்திரி. இப்பொழுது ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் பிரயாணிகளும், சரக்குகளும் வெகு சுலபமாய்ப் போக்குவரவு செய்யலாம். சூயெஸ் வாய்க்காலினால் இப்பொழுது நமது தேசத்திலிருந்து இங்கிலாந்துக்குப் போகும் பிரயாணச்செலவு முன்னிருந்ததற்குப் பாதியாகக் குறைந்தது. இன்னுங் கொஞ்சக்காலத்திற்குள் இப்பிரயாணச்செலவு இதிலும் குறைவாய்ப்போமென்பதற்குச சந்தேகமில்லை. இக்காரியம் நமது தேசத்தில் வியாபாரம், கல்வி, நாகரிகம் முதலியவை அபிவிர்த்தியாவதற்கு மிகவும் அநுகூலமாகையால், யாவரும் சந்தோஷப்படுவேதற்கு நியாயமுண்டு. சூயெஸ் பூசந்திவாய்க்கால் ஜெயமாய் முடிந்தபடியால், தென்அமெரிக்காவையும், வடஅமெரிக்காவையும இணைக்கிற பூசந்தியையும் வெட்டி, ஒரு வாய்க்காலை உண்டுபண்ணி, அத்லாந்திக்சமுத்திரத்தையும், பாஸிபிக்சமுத்திரத்தையும் இணைக்கும்படி சீக்கிரம் எத்தனிப்பார்களென்பதற்கு ஐயமில்லை.